மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 110, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

110--

பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்

**87906--டாக்டர் ஜெ. பரந்தாமன்:*

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், பேர்ணாம்பட்டு தொகுதி, வடசேரியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், வடசேரியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. பேரணாம்பட்டு, மேல்பட்டியில் ஒரு கால்நடை மருந்தகத்தை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் ஆசியோடு மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் துவங்கி வைத்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிறைய விவசாயிகள் அந்தப் பகுதியிலே பசுமாடுகள் வைத்திருக்கிறார்கள். குறிப்பாக, ஆதிதிராவிடர்/பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிகம் வைத்திருக்கிறார்கள். எனவே, கால்நடை வளம் பெருகி கிராம முன்னேற்றத்திற்கு அது உதவும் என்பதால் வடசேரியில் பால் குளிரூட்டும் நிலையம் துவங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பேரணாம்பட்டுத் தொகுதியில் 27 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நாளொன்றுக்கு 5,750

1996 பிப்ரவரி 23]

லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு அது 14 கி.மீ. தொலைவிலுள்ள ஆம்பூர் குளிரூட்டும் நிலையத்தில் பதப்படுத்தப்படுகிறது. ஆம்பூர் குளிரூட்டும் நிலையத்தினுடைய குளிரூட்டும் திறன் 50,000 லிட்டர் ஆகும். அதனால் புதியதாக ஒரு பால் குளிரூட்டும் நில்யம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லையென்று அரசு கருதுகிறது.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகத்தில் பிறந்து ஜகத்தை ஆளும் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பிறந்தநாளில் தமிழக மக்கள், மகராசியால், சுகவாசியாக இருக்கிறோம் என்று வாழ்த்திக் கொண்டிருக்கிற இந்த நல்ல நாளில், நம் அனைவருடைய வாழ்த்துக்களையும், வாழ்வாங்கு வாழவேண்டும் என்று சொல்கிற எண்ணத்தோடு இணைத்துக் கொண்டு பேரணாம்பட்டு தொகுதியில் மழை நன்றாக தற்போது பெய்திருக்கிறது. உப்பு நீர் நல்ல நீராக மாறியிருக்கிறது. நிறைய பெண்கள் மாடுகள் வளர்ப்பதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். ஆம்பூர் நிறைய தூரம் இருக்கிறது. எனவே, வாய்ப்புவரும் போது பால் உற்பத்தி கூடுமானால் இந்தப் பகுதியிலேயே பால் குளிரூட்டும் நிலையம் துவங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தி அதிகரிக்கிற நேரத்திலே நிதி ஆதாரங்களைக் கருத்தில் கொண்டு இதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 111, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

111--

நிதி நிறுவனம் அமைத்தல்

84148--திருமதி கே. மரியம் உல் ஆசியா:

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

சிறுபான்மையினர் மேம்பாட்டுக்கான நிதி நிறுவனம் மத்திய அரசு அமைத்திருப்பதுபோல், மாநில அரசு அமைக்க அரசு ஆவன செய்யுமா?